


கோவை வடக்கு மாவட்டம், கரும்புக்கடை பகுதி கழக செயலாளர் எஸ்.ஜெய்லாப்தீன் தங்கை மகன் கரும்புகடை பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் சஜின் தவ்பியா திருமணம் அண்மையில் நடைபெற்றது. கழக துணை பொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா மணமக்களை நேரில் சந்தித்து வாழ்த்தினார். இதில் மாவட்டச் செயலாளர்கள் தொண்டாமுத்தூர் அ.ரவி கோவை வடக்கு, தளபதி முருகேசன் கோவை தெற்கு, பகுதி கழக செயலாளர்கள் கரும்புக்கடை ஜெய்லாப்தீன், செல்வபுரம் கேபிள் மணி, மாநகர மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், மாமன்ற உறுப்பினர் உதயநிதி பாபு, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தியாகு, வட்ட செயலாளர்கள் ஷாஜகான், குத்புதீன், இப்ராஹிம் உள்பட கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள், பூத் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், கோவை புதூர் பகுதி, வார்டு எண் 91 சுகுணாபுரம் மேற்கு, கல்கி கார்டனில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொது விநியோக கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இதில் பகுதிக் கழகச் செயலாளர்கள் முரளி, சிவசக்தி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாற்றுத் திறனாளிகளுக்கு அப்பட்டமான ஏமாற்றம்!

# மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு கலந்தாய்வை முறையாக நடத்துக!

## பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 5–

மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கலந்தாய்வை முறையாக நடத்தவும் என்று தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:–

மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கலந்தாய்வு, விதிமுறைகளுக்குப் புறம்பாக நேற்று முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாற்றுத்திறனாளி அரசு ஊழியர்களுக்கான பதவி உயர்வு அரசாணை எண் 6ன் பிரகாரம், மாற்றுத்திறனாளிகளுக்கான பொதுப் பட்டியல் (General) தனியாகவும், 4 சதவீத உள்ஒதுக்கீட்டுப் பட்டியல் (Quota) தனியாகவும் பிரிக்கப்பட்டு, காலிப்பணியிடங்கள் காட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கடந்த 29/06/2026 அன்று வெளியிட்ட முன்னுரிமைப் பட்டியலில், பொதுப் பட்டியலில் வர வேண்டியவர்களை உள்ஒதுக்கீட்டுப் கோட்டாவில் கணக்கு காட்டியுள்ளனர். இதனால் கோட்டாவின் கீழ் வரக்கூடிய தகுதியான மாற்றுத்திறனாளிகள் பயனடையாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மொத்தம் பதவி உயர்வு வழங்கப்படும் 439 பணியிடங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கு 17 இடங்கள் வழங்கப்பட வேண்டும். இதில் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுப் பிரிவுக்குச் சென்றது போக, மீதமுள்ள 13 இடங்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கோட்டாவில் காட்டப்பட்டுள்ளன. இந்த 13 இடங்களில், 6 இடங்கள் மாற்றுத்திறனாளிகளின் பணிமூப்பு அடிப்படையில் பொதுப் பட்டியலிலேயே (General) சென்றிருக்க வேண்டியவை ஆகும். அதனை உள்ஒதுக்கீட்டுப் கோட்டாவில் கணக்கு காட்டியுள்ள தால், கோட்டாவின் கீழ் வர வேண்டிய மாற்றுத்திறனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அப்பட்டமான விதிமீறல் குறித்து, மாற்றுத்திறனாளி ஆசிரியர்கள் சங்கத்தின் மாநில இணைச் செயலாளர்கள், நேற்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் செயலாளர் திருமதி. மதுமதி மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி. லட்சுமி ஆகியோரை நேரில் சந்தித்து மனு அளித்தனர். அப்போது, ஆணையர் லட்சுமி பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, ”கலந்தாய்வை நிறுத்தி விட்டு, கோப்புகளை நேற்று (03/07/2026) மாநில ஆணையத்திற்கு எடுத்து வாருங்கள் என்று அறிவுறுத்தினார். அதற்கு இயக்குநரும் ஒப்புதல் தெரிவித்தார். ஆனால், சொன்னபடி கலந்தாய்வை நிறுத்தாமல், நேற்று காலை 8:30 மணி முதல் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு மேல் ‘இறுதி பட்டியல்’ (Final List) வெளியிடப்பட்டது. அதில் 2 மற்றும் 3ஆம் பக்கங்களில் மாற்றுத்திறனாளிகளைப் பரிசீலனை செய்து, சுழற்சி முறையில் பொதுப் பட்டியலையும் கோட்டாவையும் பிரித்துக் காட்டியிருப்பதாகத் தலைப்பை (Title) மட்டும் மாற்றியுள்ளனர். ஆனால், உள்விவரப் பட்டியலில் பொதுப் பிரிவில் இருக்க வேண்டியவர்களை மீண்டும் கோட்டாவிலேயேதான் வைத்துள்ளனர். கடந்த 29/06/2026 அன்று வெளியான பட்டியலில் இருந்த தவறுகளை எதையுமே திருத்தாமல், வெறும் தலைப்பை மட்டும் மாற்றி மாற்றுத்திறனாளிகளுக்குப் பாதகமான அப்பட்டமான ஏமாற்றத்தைச் செய்திருக்கிறார்கள்.

இந்த மாற்றுத்திறனாளிகள் அமைச்சகம் முதலமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருந்தும், இந்த விவகாரத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பது மாற்றுத்திறனாளிகளைத் தமிழ்நாட்டில் அனாதையாக விட்டுவிட்டாரோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

இதற்கு முன்பு, மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலில், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்காக எண்ணற்ற ஏராளமான நலத்திட்டங்களைச் செய்திருக்கிறார். அவரது காலகட்டத்தில் பதவி உயர்வுகளில் இது போன்ற பிரச்சனைகள் ஒரு போதும் எழுந்ததில்லை.

இவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் வகுத்திருக்கின்ற முறைப்படியும் இந்திய பார்வையற்றோர் இணையம் எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான பதவி உயர்வு தீர்ப்பை, முறையாக பள்ளிக் கல்வித்துறை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் சார்பாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தியுள்ளார்.

# கரம்பற்றி நலம் அறிந்தார்!

அறிவு ஆலயத்தில்

"ஆண்டவரை"

கண்டேன்...

கரம்பற்றி

கனிவோடு

நலம் அறிந்தார்

விரதமிருந்து

தரிசித்த

பக்தனாக

விழி நிறைந்த



மகிழ்வோடு

வீடு திரும்பினேன்..

**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராசிபுரம் கே. இராமசாமி

ஜூலை 5 (2000)



சேலம் மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், திராவிட இயக்கத்தின ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்தவர்.

இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் என இரு ஒன்றியங்களில் செயலாளராக இருந்தவர். பேரூர்க் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

இராசிபுரம் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், தமிழ்நாடு மாநில நிலவள வங்கி இயக்குனராகவும் பொறுப்பு வகித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு “மாநில சிறந்த கூட்டுறவாளர்” விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### எம்.எல்.ஏ.க்களை ராஜினாமா செய்ய வைத்த

# விஜய் மீது எப்போது எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்போகிறார்கள்?

## முன்னாள் எம்.எல்.ஏ. பனையூர் மு.பாபு கேள்வி!

சென்னை, ஜூலை 5-

முன்னாள் எம்.எல்.ஏ. பனையூர் மு.பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் தற்போது மக்கள் கூறுவது போல் தற்குறி ஆட்சி நடப்பதால் எப்போதும் நடைபெறாத சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா ஆளுங்கட்சியின் தூண்டுத லில் சர்வ சாதாரணமாக செய்யப்பட்டு வருகிறது. ஊத்தங்கரை த.வெ.க. எம்.எல்.ஏ. இளையராஜாவை ஆட்சிக்கு எதிராக செயல்பட வைக்க பேரம் பேசியதாக கூறி ஒருசிலரை கைது செய்ததோடு முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அரசு சுமத்தியிருக்கிறது.

ஊத்தங்கரை எம்.எல்.ஏ. ராஜினாமாவும் செய்யவில்லை, த.வெ.க. ஆட்சிக்கு எதிராகவும் திரும்பவில்லை. ஆனாலும், திராவிட முன்னேற்றக்கழகம் மீது அவதூறு பரப்பும் ஒரே நோக்கில் த.வெ.க. செயல்படுகிறது. அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் எம்.எல்.ஏ.வான மன்னார்குடி எஸ்.காமராஜ் தற்போது த.வெ.க. கட்டுப்பாட்டில் இருக்கிறார். அ.தி.மு.க. எம்.எல்.ஏ. க்கள் 6 பேரிடம் டீல் பேசி த.வெ.க.வினர் பதவியை ராஜினாமா செய்ய வைத்திருக்கிறார்கள்.

இதுபோக, தி.மு.க. சின்னத்தில் போட்டியிட்டு வென்ற ம.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் இருவரை ராஜினாமா செய்ய சொல்லுங்கள் என முதல்வர் விஜய் பேசியதாக வைகோ பட்டவர்த்தனமாக பேசியிருக்கிறார். அதேநேரம், எங்கள் எம்.எல்.ஏ.க்களை நானே ராஜினாமா செய்ய சொன்னேன் என்றும் வைகோ வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். தி.மு.க. முக்கிய பிரமுகர்கள் மீது அவதூறு பரப்ப துடிக்கும் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவை காவல்துறை எப்போது கைது செய்யும். ராஜினாமா செய்ய சொன்ன முதல்வர் விஜய் மீது எப்போது எப்ஐஆர் பதிவு செய்யப் போகிறது?

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### வாணியம்பாடியில் கடந்த ஆண்டு காரில் சென்று

# ஆடு திருடிய வழக்கில் சிக்கியவருக்கு - அரசு முதன்மை வழக்கறிஞர் பதவி!

திருப்பத்தூர், ஜூலை 5-

வாணியம்பாடியில் கடந்த ஆண்டு காரில் சென்று ஆடு திருடிய வழக்கில் தொடர்புடையவருக்கு அரசு வழக்கறிஞர் பதவி வழங்கப்பட்டுள்ளது வழக்கறிஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி புதூர் ஏரிக்கரை பகுதியை சேர்ந்தவர் அஞ்சலா, கணவனை இழந்தவர். இவர் வாழ்வாதாரத்திற்காக ஆடுகளை வளர்த்து பிழைப்பு நடத்தி வந்துள்ளார்.

இந்நிலையில், அஞ்சலா வளர்த்து வந்த ஆடுகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றுள்ளதாக தெரிகிறது. இதுதொடர்பாக அவர் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில், தான் வளர்த்து வந்த ஆடுகளை காணவில்லை என்று புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் வழக்கு பதிந்து, அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அப்போது, வாணியம்பாடி அம்பலால் நகர் பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஷேக் சுல்தான் என்பவர், திருமலை என்பவருடன் சேர்ந்து, காரில் அஞ்சலாவின் ஆடுகளை திருடிச் சென்றது தெரிய வந்தது. இதையடுத்து வாணியம்பாடி நகர போலீசார், வழக்கறிஞர் சுல்தான், திருமலை ஆகிய 2 பேர் மீதும் வழக்கு பதிவு செய்தனர். இந்நிலையில் ஆடு திருடியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள, வழக்கறிஞர் ஷேக் சுல்தான், திருப்பத்தூர் நீதிமன்றத்தில், தமிழக அரசு சார்பில், சிவில் வழக்குகள் தொடர்பாக அரசு தரப்பில் வழக்காடுவதற்காக, முதன்மை அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் வழக்கறிஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

வழக்கறிஞர் ஷேக் சுல்தான் மற்றும் திருமலை ஆகியோர் மீதான வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் இந்த வழக்கு தொடர்பாக வருகிற 22ம் தேதி வழக்கறிஞரை நீதிமன்றத்தில் ஆஜராக நீதிமன்றத்தின் சார்பில் சம்மன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆடு திருடிய வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், தற்போது திருப்பத்தூர் மாவட்ட அரசு அமர்வு நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் அரசு தரப்பு வழக்கறிஞராக, வழக்கறிஞர் ஷேக் சுல்தான் நியமிக்கப்பட்டுள்ளார். இது திருப்பத்தூர் நீதிமன்ற வட்டாரத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

**குற்றப்பின்னணி உள்ளவரை நியமிப்பதா?**

சமுதாயத்தில் குற்றச் செயலில் ஈடுபட்டதாக, குற்றம் சாட்டப்பட்ட நபர்களை நீதிபதியின் தீர்ப்புக்கு முன்னர் நீதி மன்றத்தில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளும் பொறுப்புள்ள பணியை மேற்கொள்பவர்கள் வழக்கறிஞர்கள். சட்டம் ஒழுங்கை பாதுகாக்க அமைக்கப்பட்ட மேன்மையான பணியை மேற்கொள்பவர்கள் வழக்கறிஞர்கள். இத்தகைய வழக்கறிஞர் பணியை அரசு தரப்பில் வாதாட பணி ஆணை வழங்கப்படும்போது அதை சார்ந்த வழக்கறிஞரின் குற்ற பின்னணியை சரியாக விசாரணை மேற்கொண்டு அரசு தரப்பில் பணி ஆணை வழங்கப்பட வேண்டும் எனவும் இல்லையேல் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகும் என்றும் சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி பார்வதி நாராயணசாமி

ஜூலை 5 (2023)



தனது இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு கழக மகளிர் அணியில் பணியாற்றத் தொடங்கியவர்.

வடசென்னை மாவட்டம், ஆர்.கே.நகர் பகுதி மகளிர் அணி அமைப்பாளராக மூன்று முறையும், மாவட்ட மகளிர் அணி தலைவராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழக வளரப் பாடுபட்டவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**